பத்திரிக்கைச்செய்தி

**ஆற்றலை சேமித்து, உற்பத்தி செலவை குறைத்து, லாபத்தை அதிகப்படுத்தும் பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு தேனி மாவட்ட தொழில் நிறுவனங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அழைப்பு**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தும் ஆற்றலை தணிக்கை செய்து ஆற்றலை சேமித்து நிறுவனத்தின் இலாபத்தை அதிகப்படுத்தும் வகையில், "ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் [ Promotion of Energy Audit and Conservation of Energy (PEACE) ] " என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்து, மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

தேனி மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் [ Promotion of Energy Audit and Conservation of Energy (PEACE) ] " என்ற புதிய திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் 29.08.2017 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் ஹோட்டல் வெஸ்டர்ன் கேட்ஸ், தேனியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து 11.09.2017 முதல் 13.09.2017 வரை ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் குறித்த 3 நாட்கள் பயிற்சி நடைபெற உள்ளது. இதற்கு பயிற்சி கட்டணம் ஏதும் இல்லை.

இப்பயிற்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் மின் ஆற்றல், இயந்திர ஆற்றல், வெப்ப ஆற்றல், மின்னாக்கி ஆற்றல் ஆகியவை தேவையில்லாமல் விரையமாவதை தடுக்கும் பொருட்டு தணிக்கை செய்து ஆற்றலை சேமிப்பதற்கான வழிவகைகள் குறித்து வல்லுநர்களால் எடுத்துரைக்கபட உள்ளது.

எனவே தேனி மாவட்டத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இத் திட்டத்தின் கீழ் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறும், பயிற்சியில் கலந்து கொள்ள பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தேனி அவர்களை நேரிலோ. அல்லது 81899-25644 என்ற அலைபேசியிலோ தொடர்பு கொள்ளுமாறும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
தேனி